MATERIAL INTELLIGENCE


# A MACHINE BOOSTING ENERGY INTO THE UNIVERSE

## பிரபஞ்சத்திற்குள் சக்தியைப் பாய்ச்சும் ஓர் இயந்திரம்

“ஹெச்.டி. நாம் சந்திக்க விரும்பும் ஆவிகளை நம்முடன் அணுக்கமாக்க உதவுகிறது,” என்று கொராக்கிரிட் அருணாநோண்ட்சாய் சொல்கிறார். அந்தக் கலைஞர், ஆவிகள் நமது காணொளிகள் மற்றும் இயந்திரங்களின் வாயிலாக வாழும் என்று நம்புகிறார்: அதிகத் துல்லியமான கைபேசிக் காமெராக்கள் நாம் பார்க்கும் புராண உயிரினங்களைப் படம்பிடிக்க முடியும் என்பது அந்தக் கலைஞரின் கருத்து; அதே வேளையில் ஆளில்லா வானூர்திகள் வானில் பேய்க்கண்களாகச் செயல்பட்டு, அவற்றிற்கு அப்பாலும் தொடர்புகொள்ள உதவுகின்றன.

*பிரபஞ்சத்திற்குள் சக்தியைப் பாய்ச்சும் ஓர் இயந்திரம்* என்னும் படைப்பில், தற்கால பேங்காக்கில் – ஆவிகள் பற்றிய நம்பிக்கையும் அதிநவீனத் தொழில்நுட்பங்களும் இணையாக வாழும் அன்றாட வாழ்க்கை கொண்ட நகரத்தில் - மனிதன், இயந்திரம், ஆவி ஆகியவை ஒன்றாக இணைவதைக் கொராக்கிரிட் ஆராய்கிறார். சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டில் உள்ள *வினோதமான பெயர்களைக் கொண்ட மனிதர்கள் நிறைந்த ஓர் அறையில் வரலாற்றுடன் ஓவியம் தீட்டுதல் 3* (2015–2016) என்னும் கொராக்கிரிட்டின் புகழ்பெற்ற காணொளி அமைப்பை . இந்தக் கண்காட்சி மையப்படுத்துகிறது. இந்தத் தொகுப்பு, குடும்ப நிழற்படங்கள், ராப் இசை நிகழ்ச்சிகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட பட வெட்டுகள் ஆகிய சொந்த மற்றும் கூட்டு நினைவுத் தடங்களை இணைத்து ஒரு கவித்துவ உணர்வு ஓட்டத்தினை உருவாக்குகிறது. அந்தக் காணொளியின் நீட்டிப்பு அம்சமாக, கலைக்கூடம் பேரழிவுக்குப் பிந்திய குப்பைமேடாக மாற்றப்பட்டுள்ளது. அந்த இடத்தில் பாம்புபோல் வளைந்து நெளிந்து செல்லும் மின்கம்பிகள், பேங்காக்கின் நகர்ப்புற நிலப்பரப்பில் குறுக்கும் நெடுக்குமாகச் சென்று குழப்பத்தை ஏற்படுத்துவதுபோல் தோன்றுகின்றன. நகரத்தின் வருங்கால வசிப்பாளர்கள், வீசியெறியப்பட்ட உருவ பொம்மைகள், பயன்படுத்தப்பட மின்னியல் பொருட்கள் ஆகியவற்றால் செய்யப்பட்ட மனிதனும் இயந்திரமும் இணைந்த சைபோர்க் சிற்பங்களைப் போல் காட்சியளிகின்றனர். கொராக்கிரிட்டின் கலைச் செய்முறைகள் திரைப்படம், இசை, மேடைக்கலை, வடிவமைப்பு ஆகியவற்றில் விரிவான தாக்கத்தை ஏற்படுத்தும் அமிழ்த்தும் அனுபவத்தை உருவாக்குவது தொடர்பானது. இங்கு அவர், நம்மை மின்னிலக்க மற்றும் ஆவி உலகச் சக்திகளுடன் தொடர்புடைய வாழும் இயந்திரத்தின் ஒரு பகுதியாக ஒன்றாக இருக்கும்படி அழைக்கிறார்.

கொராக்கிரிட் அருணாநோண்ட்சாய் (பி. 1986) நியூயார்க்கிலும் பேங்காக்கிலும் வசிக்கும் ஒரு காணொளிக் கலைஞர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் ஒரு கதைசொல்லி. அவர் *பொருள்சார்ந்த அறிவுத்திறம்* என்னும் கண்காட்சித் தொடரைத் தொடங்குகிறார்; அது இன்றைய கலைஞர்கள் எவ்வாறு கைவினை மற்றும் தொழில்துறையுடன் தொடர்புள்ள மாதிரிகளில் இருந்து நமது சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப வருங்காலத்தின் முன்னுரைப்புகள் வரை இணைக்கின்றனர் என்பதைப் புலனாய்வு செய்கிறது.




## *வினோதமான பெயர்களைக் கொண்ட மனிதர்கள் நிறைந்த ஓர் அறையில் வரலாற்றுடன் ஓவியம் தீட்டுதல் 3 – நாகா அமைப்பு*

2016

(1) நாகா சிற்பம்: மின் கம்பிக் குழல், வரிவரியான நெகிழிக் குழாய், இணைப்புப் பட்டைகள், நெகிழி எலும்புகள், அக்ரிலிக் சாயம், ஆளில்லா வானூர்திப் பகுதிகள், எல்இடி விளக்குகள், அடிச்சட்ட வன்பொருள், மற்றும் உருக்கு அடிச்சட்டத் தகடு

(2) கண்ணாடிப் பெட்டி: கண்ணாடி, உலோகச் சட்டம், பிளாஸ்டர், சிலிக்கோன் அச்சு, மின் கம்பி, நெகிழி எலும்புகள், செயற்கைச் செடிகள்

(3) வானூர்திக் கவசம்: அக்ரிலிக், நைலோன், அடிச்சட்ட வன்பொருள்

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

## *தலைப்பில்லாதது (பார்வையாளர்கள்)*


2016

(4) ஆடைகள், சாயம் தோய்க்கப்பட்ட டெனிம், வாகன உதிரிப் பாகங்கள், மற்றும் உருவப் பொம்மைகள் மீது அக்ரிலிக்

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

கலைக்கூடத்தில் பேரழிவுக்குப் பிந்திய சூழலில், வருங்காலத்தில் தொழில்நுட்பத்திற்கும் ஆவிகளுக்கும் இடையில் ஒன்றிணைதல் ஏற்படும் என்று கொராக்கிரிட் முன்னுரைக்கிறார். அந்த இடத்தில் வளைந்து நெளிந்து செல்வது தாய்லாந்து மற்றும் தென்கிழக்காசிய இந்து-பௌத்த புராணக் கதைகளில் கூறப்படும் ஒரு புராணப் பாம்பான *நாகா*. இங்கு அது மின்னியல் கழிவுப் பொருட்களையும் காலாவதியான தொழில்நுட்பத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. தேவலோகப் பறவையான *கருடாவைப்*போன்று அதற்குச் சரிநிகர் சமானமான, மனிதனின் கூறுகள் வழங்கப்பட்டுள்ள, காணொளிக் காட்சியின் வானூர்திக் கதாபாத்திரமான சந்திரி, சுவரிலிருந்து வெளிவருகிறது. இதற்கிடையே, சைபோர்க்குகள் என்னும் மனித அளவிலான உருவப் பொம்மைகள், சாயம் தோய்க்கப்பட்ட, எரித்த டெனிம் துணி மற்றும் காற்பந்துச் சட்டைகள், மற்றும் வாகன உதிரிப் பாகங்களை அணிந்துகொண்டு, அமைதியாகத் திரையைக் கவனிக்கின்றன. இந்த உருவங்கள் அனைத்தும் மனிதன், ஆவி, இயந்திர உலகங்களுக்குப் பாலம் அமைக்கும் அண்டவியல் உலகத்தில் ஒன்றாக வசிக்கின்றன.

கொராக்கிரிட்டின் கதைசொல்லுதல் விநோதமாக இருந்தாலும் அவருடைய கலைப்படைப்பாக்கச் செயல்முறை இவ்வுலகம் சார்ந்தவை. புகழ்பெற்ற கலாசாரத்தின் அம்சங்களைத் தனது காணொளியில் மறுசுழற்சி செய்யும் அதே வழியில், மீட்கப்பட்ட, பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தனது அமைப்பிற்குப் பயன்படுத்துவது மிச்சமுள்ள நமது பகிரப்படும் அன்றாட அனுபவங்களை வலியுறுத்துகிறது. இந்தப் பொருட்களில், கடந்த பல ஆண்டுகளில் சாதாரணப் பொருட்களில் இருந்து பிரமிக்கத்தக்க சிற்பங்களை உருவாக்க ஒன்றாகப் பாடுபட்ட அவரது நண்பர்கள், குடும்பத்தினர், சமூகத்தினர் ஆகியோரின் நினைவுகள் பொறிக்கப்பட்டுள்ளன. திரைகள், கண்காணிப்புத் தொழில்நுட்பம், செயற்கை அறிவுத்திறன் ஆகியவை பல்கிப் பெருகியுள்ள நேரத்தில், கொராக்கிரிட்டின் அமைப்பின் தொட்டுணரக்கூடிய நேரடி மெய்மைத்தன்மை ஒரு நிதானமான கேள்வியை எழுப்புகிறது: நாம் எவ்வாறு ஒரு வருங்கால உலகத்தைக் கட்டமைக்கப் போகிறோம், மற்றும் அது யாருடையதாக இருக்கும்?




## *வினோதமான பெயர்களைக் கொண்ட மனிதர்கள் நிறைந்த ஓர் அறையில் வரலாற்றுடன் ஓவியம் தீட்டுதல் 3*

2015

5 காணொளி, ஒற்றை ஒளிவழி, 16:9 வடிவம், வண்ணமும் ஒலியும் (ஸ்டீரியோ), 24 நி 55 வி

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

## *தலைப்பில்லாதது (வரலாற்று ஓவியம்)*

2016

6 டெனிம் துணியில் அக்ரிலிக், மற்றும் கித்தானில் மின்னிலக்க அச்சு

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

*வினோதமான பெயர்களைக் கொண்ட மனிதர்கள் நிறைந்த ஓர் அறையில் வரலாற்றுடன் ஓவியம் தீட்டுதல் 3*, நேரத்தின் நீண்டு மீளும் உணர்வுடன் மன்றாடுகிறது. பேங்காக் நகரத்திற்கான இந்தப் புகழுரையில், தொடர் கதையமைப்புக்குப் பதில் அந்த மனநிலையையும் சூழலையும் கொண்டுவர கதைச் சுருக்கங்கள் திரட்டப்படுகின்றன. அந்தத் தொகுப்பு, நகரும் மற்றும் நிலையான தோற்றங்கள், விரிவாகக் கதை சொல்லுதல் மற்றும் தனித்த நேரங்களுக்கு இடையே சுழல்கிறது. கொராக்கிரிட் கதை சொல்வதற்கான ஒரு வாகனமாக இசைக் காணொளி வடிவத்தை ஏற்றுக்கொள்கிறார்; அதன் மூலம், மன்றக் கலாசாரம், ராப் இசை நிகழ்ச்சிகளின் சக்தியைப் பயன்படுத்தி ஒரு கூட்டு அனுபவத்தை உருவாக்குகிறார். அந்தக் காணொளி, கதைசொல்லி கூறும் “உணர்வுகளின் ஏரியில்” நம்மை அமிழ்த்துகிறது.

ஆனால் நெகிழ்வான அந்தக் கதை சொல்லுதல், எப்போதும் கிட்டத்தட்ட அமைதிக்கு நம்மைக் கொண்டுவருகிறது. அந்த டெனிம் ஓவியர் தமது முதுகைக் புகைப்படக்கருவிக்குக்காட்டிக்கொண்டு ஆற்றங்கரையில் நின்றுகொண்டு வெறித்துப் பார்க்கும் காட்சியுடன் அந்தக் காணொளி தொடங்குகிறது, முடிகிறது. சந்திரி என்னும் உணர்ச்சியுள்ள வானூர்திக்கதாபாத்திரத்தால் படம் பிடிக்கப்பட்ட, கலைஞரின் இந்த ஓவியம், *தலைப்பில்லாதது (வரலாற்று ஓவியம்)* என்பதில் மறுஉருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஓவியம் கொடுமையான ஒரு தீச்சுவாலையால் தாக்கப்பட்டு, அந்தத் தோற்றத்திற்கு, பேரழிவு மறுபிறப்பின் அந்த நொடியில் உயிரூட்டுகிறது. *தலைப்பில்லாதது (வரலாற்று ஓவியம்)*, ஓர் ஊடகத்திலிருந்து மற்றோர் ஊடகத்திற்கு மாறும் வேளையில், நேரடி மற்றும் மின்னிலக்க அதிகார எல்லைகளுக்கு இடையில், நினைவின் நிலையற்ற தன்மையை எடுத்துரைக்கிறது. வருங்காலத்தில் மனிதர்களும் இயந்திரங்களும் மேலும் அதிகமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் நேரத்தில், நினைவு பற்றியும் கதை சொல்லுதல் குறித்தும் நமது – தன்னுணர்வுகூட – எப்படி மாறும்?